18-8-20187

ஓஎஸ் 260/2015

பி.வா.சா. சுப்ரமணி

பி.வா.சா. 2 சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை..

கு.வி.

1ம் பிரதிவாதி என்து தங்கை. இந்த வழக்குடன் மற்றொரு வழக்கும் தாக்கல் செய்திருக்கும் விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்து அவர்களுடைய குடும்பத்திற்கு பாத்தியப்பட்டதுதான். மேற்படி தாவா சொத்து அல்லாத வேறு சொத்துக்கள் இருப்பதாகவும்அதை பாகப்பிரிவினை செய்துகொடுக்கும்படி கோரியிருக்கிறேன். இந்த வழக்கில் சேர்க்கப்படாதசொத்துக்களை சேர்த்து ஓ எஸ் 154/16 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் விஸ்தீரணமான 1 ஏக்கர் 43 சென்ட்ஐ ஓஎஸ் 1543/16 வழக்கில்சேர்த்து சொல்லப்படவிலலையென்று சொன்னால் சரியல்ல. முழு சொத்தையு் மசேர்த்துதான் போடப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்கள் அனைத்தும் இநத வழக்கின் பிரதிவாதிகளின் வசம் தான் உள்ளது. மேற்படி குடும்பத்தாருக்கு 1 ஏக்கர் 43 சென்ட் விஸதீரணம் தான் உள்ளத என்றம் வேறு சொ்துக்கள் எதுவும் இல்லையென்றும் வழக்கிற்காக வேறு சொ்துதுக்கள்உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என் தங்கை 1ம் பிரிதிவாதி பாக்கியத்தை திருமணம் செய்துகொடுத்த பின்புதான் அவர்களுடைய குடும்பத்தாரின் சொ்துதுக்கள் குறித்து எனக்கு தெரியும். என்னுடைய தங்கையின் கணவட்ர வேணுகோபாலின் பாட்டனார். முப்பாட்டனார் ஆகியோர்களை எனக்கு தெரியும் . மேற்படி வேணுகோபாலின் முதாதையரை குறித்து எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொ்துத பொறுத்து எனக்கு தெரியும் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தற்போது தாவா சொத்தில் என்ன வெள்ளாமை செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் வெள்ளாமை எதுவும் செய்யவில்லை. தொழில் செய்து வருகிறார்கள். 2ம் பிரதிவாதி ரமேஷ்குமார்தான் என்னை சாட்சியம் சொல்ல அழைத்தார். வழக்கு விவரங்களை எனக்கு சொன்னார். வழக்கு விவரம் தெரியாமல் ரமேஷ்குமாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. இவ்வழக்கு தீர்பபாகவேண்டும் என்றும் ஓ எஸ் 254/16 தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

5,12,123,14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1ம் பிரதிவாதி என் தங்கை பாக்கியத்தை வேணுகோபாலுக்கு 4-7-1974 ல் திருமணம் செய்து கொடுத்தோம். அதே குடும்பத்திற்கு என் அக்காவையும் திருமணம் செய்துகொடுத்திருப்பதால் பாக்கியத்தின் கணவரின் குடும்பத்தை பொறுத்து எனக்கு

ஏற்கனவே தெரியும். வேணுகோபாலின் தகப்பனார் மற்றும்அவரது பாட்டனார் எவ்வளவு சொத்தை கிரையம் வாங்கினார் என்று 453/1,2,3, சர்வேஎண்களில் 453/1,2 ல் ரமேஷ்குமார் தனக்கு பாகம் இருப்பதாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். மேற்படி சர்வே எண்களின் மொத்தத விஸ்தீரனம் 8 ஏக்கர் ஆகும். வேணுகோபால்ஒரு ஏக்கர், ராமசாமி ஒரு ஏக்கர் அவரது சகோதரர்களுக்கு தலா 27 செண்ட் போக 8 ஏக்கர் என்று சொல்கிறேன். மேற்படி சொத்துக்கள் போகத்தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றும் நான் அதிக விஸ்தீரணத்தை சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராமசாமி, வேணுகோபாலுக்கு 3 ஏக்கர் 64 செண்ட், அப்பாவுக்கு 3 ஏக்கர் 64 செண்ட் மொத்தம் 10 ஏக்கர் 84 செண்ட் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. அந்த 10 ஏக்கர் 84 செண்டில் அப்பாவுக்கு 3 ஏக்கர் 54 செண்ட் ஐ எங்களுக்கு விற்று விட்டார் . அவருக்கு 5 குழந்தைகள். அப்பாவு கவுண்டர் இறந்த பிறகு அவருடைய பிள்ளைகளுககுமிடையே பாகப்பிரிவினை செய்துகொண்டார்களா என்றால் பிரித்து கொள்ளவில்லை.அந்த 5 ஆண்மகன்களில் ஒருவர் பெருமாள் கவுண்டர் என்றால் அது எனக்கு தெரியாது. பெருமாள் கவுண்டர் ஒருவர் இருந்தார் அவருடைய தாய் தகப்பனார் பெயர் தெரியாது. இராமசாமி கவுண்டர் அப்பா பெருமாள் கவுண்டர் என்பது வேறு அப்பாவு கவுண்டர் மகன் பெருமாள் கவுண்டர் என்பது வேறு ஆகும். பெருமாள் கவுண்டர் மனைவி பெயர் பொன்னம்மாள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 12,13,14 பிரதிவாதிகளுக்கு பெருமாள் கவுண்டர் மகன்கள்தான் கிரையம்கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. மேற்ணுபடி 12,13.14 பிரதவாதிகளீன சொர்த்து வேறு என்றும் அவர்களுக்கிடையே சம்மந்தம் எதுவும் இல்லை என் று சொன்னால் சரியல்ல. 1 ஏக்கர் 43 செண்ட் தான் அவர்களுடைய குடும்பத்திற்கு பாகத்திற்குமீதமுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 10 ஏக்கர் 84 செண்ட்டில் சுமார் 1000 பேர் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றும் நான்தாவா சொத்திற்கு போகவில்லை என்பதால்தான் அதன் தன்மை குறித்து தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரமேஷ்குமார் நிலத்திற்கு மேற்கே 12,13.14 பிரதிவாதிகளின் நிலம் உள்ளது என்றால் சரியல்ல. குறுக்கே 9 அடி வண்டிபாதை ரோடு போகிறது என்றால் ஆம் போகிறது. நான்தான் ரமேஷ்குமாரை தூண்டிவிட்டு சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல., நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-

III Additional District Judge, Salem.

18-8-2018

ஓ எஸ் 137/2007

பி.வா.சா. ரவிச்சந்திரன்

பி.வா.சா. 2 சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

கு,வி.,

நான் பி.காம் வரை படித்திருக்கிறேன். ஏ.பி. முருகேசன், ஏ.பி. வைத்திலிங்கம் . ஏ.பி. சண்முகம் ஆகியோர்களை எனக்கு நன்கு தெரியும். ஆளுக்கொருவர் வீதம் குறிப்பிட்ட காலத்திற்கு தியேட்டரை ஓட்டிக்கொள்ளவேண்டும் என்று அவர்களுக்கிடையே ஒப்பந்தம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியாது. முருகேசன் முதலியார்தான் தியேட்டரை பார்த்து வந்தார். வைத்திலிங்கம் சொந்தமாக சாயப்பட்டறை வைதது செய்து வந்தார் என்றுரதெரியும் எப்படி செய்து வத்நார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. தியேட்டருக்குரிய பவர் கொடுத்த பிறகுதான் என்னை அழைத்து பேசினார்கள். பவர் பத்திரத்திற்கும் சாந்திக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். சாந்தி வைத்திலிங்கத்தின் மகள் என்பது தெரியும். தாவா சொத்தில் கிரையம் பெற்றவர் விஜயரங்கன் என்பவர் எனக்கு அதிகார்ம் கொடுத்துள்ளார். விஜயரங்கனுக்குரிய கிரைய பத்திரங்களை நான் பார்த்திருக்கிறேன். விஜயரங்கனுக்கு கிரையம் கொடுத்தது தங்கவேல்தான். மேற்படி கிரைய பத்திரத்தில் சாந்தி பெயர் இல்லை என்று சொன்னால் ஞாபகத்தில் இல்லை. நான் அட்வான்ஸ் கொடுத்ததாக சொல்லப்படும் தொகைக்கும் வைத்திலிங்கத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. முருகேச முதலியாரிடம்தான் அட்வான்ஸ் தொகை கொடுத்தேன். மேற்படி முருகேச முதலியாரிடம் கொடுத்த அட்வான்ஸ்தொகைக்கும வைத்திலியங்கத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றுசொன்னால் சரியல்ல. மேற்படி என்னிடம் பெற்ற அட்வான்ஸ் தொகையை முருகேச முதலியார் அவரே வைத்துக்கொண்டாரா அல்லது பொது செலவு செய்தாரா என்றுஎனக்குதெரியாது. மேற்படி முருகேச முதலியார்செய்த அனைத்து பத்திரங்களிலும் சாந்தி யை விட்டு விட்டு எழுதியுள்ள விவரம் என்கது தெரியும் என்று சொன்னால் சரியல்ல. வாதியை ஏமாற்றும் எண்ணத்தல்பி.வா.சா.,ஆ 39 ஐ அனைவரும் சேர்ந்து தயார் செய்துகொண்டோம் என்றால் சரியல்ல., நான் அட்வான்ஸ் தொகை கொடுத்ததாக சொல்லப்படுவதும் பவர் ஏஜெண்ட்டான தங்கவேலும் நானும் வைத்திலியங்கதத்தின் வாரிசு சாந்தியை ஏமாற்றும் எண்ணதத்தில் வாய்தா போன கடனை கட்டிவிட்டோம்

எ றுசொன்னால் சரியல்ல. 1996 ல் கொடுத்த அட்வான்ஸ் தொகை எப்போது திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் 10,12 வருடங்கள் கழித்து திரும்ப பெற்றுக்கொண்டேன். தாவா சொத்து தற்போது காலியாக உள்ளது என்றால் அதில் நிறைய பேர் வீடு கட்டியுள்ளார்கள்.நான் பவர் வாங்கிய சொத்து காலியாகத்தான் உள்ளது- நான் பவர்

ஏஜெண்ட்டான தங்கவேலுக்கு ஆதரவாகவும் வாதிக்கு உரிமையை மறுக்கும் எண்ணத்தில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து என்னை சாட்சியமளிக்க அழைப்பாணை வந்ததின்பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன்.

Sd/-

III Additional District Judge, Salem.